*கவனிக்க.- 08.11.2024 ஆந் திகதிய 2410 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2411 - 2024 නොවැම්බර් මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.11.14**

*2411 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 478 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 480 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, திசெம்பர்மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

477 - B 82627 - 353 (2024/11)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

*இணைப்பு 09*

## காணி அபிவிருத்திக் கட்டளைக் கூட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட காணிப் பத்திரத்தை ரத்து செய்தல் (104 பிரிவு) க்கான அறிவிப்பு

*வட மத்திய மாகாண சபையின் அநுராதபுர மாவட்டத்தின் திரப்பனை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிரதிக் காணி ஆணையாளர் (உள்ளூர் மாகாண) கே. பீ. கே. எல். பீ. மதுவந்தி ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதிமேதகு ஜனாதிபதியால் 1996.05.24 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அனு/திர/பிர/1556 ஆம் இலக்கம் கொண்ட காணிப் பத்திரத்தின் உரிமையாளரான ஒருக்மான்குளம் எனும் இடத்தில் வசிக்கும் திலக்கரத்ன சந்திரசேகர முதியன்சேலாகே தயாவதிக்கு வழங்கப்பட்டு அநுராதபுர மாவட்ட பதிவாளர் காரியாலயத்தின் 176/22 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.06.16 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருக்கும், கீழே காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதில் உரிமையாளராவதற்கு சட்ட ரீதியான உரித்து உடைய ஒருவர் அல்லாததால் அல்லது உரித்துடைய ஒருவர் இருக்கின்ற போதிலும் அவர்/ அவள் ஒரு பதில் உரிமையாளராவதற்கு விருப்பமில்லாததால் பதில் உரிமைத் தன்மைக்கு ஒருவரை நியமிப்பதற்கு இல்லையென அறிவிக்கப் பட்டிருப்பதால் அந்த காணி வழங்கல் பத்திரத்தை மேற்படிச் சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதை இத்தால் அறிவிக்கின்றேன். இது தொடர்பில் ஏதேனும் எதிர்ப்பு இருப்பின் அதனை 2024.12.27 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.*

**அட்டவணை**

அநுராதபுர நிர்வாக மாவட்டத்தின் திரப்பனை பிரதேச செயலாளர் பிரிவின் உலகல்ல பத்துவவின்/கோரளையின் 529 - பெரியக்குளம கிராம சேவகர் பிரிவின் ஒருக்கன்குளம் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான ............ பொறுப்பில் இருக்கும் மற்றும் நில அளவையாளரால் வரையப்பட்ட இலக்கம் ............ கொண்ட வெளிக்களப் பத்திரத்தின் /................ ஆல் வரையப்பட்ட இலக்கம் ................ கொண்ட துண்டாக்கப்படும். நிலத் துண்டின் /............ ஆல் வரையப்பட்ட 1277 ஐக் கொண்ட வரைவுக் கோட்டுப் பதிவின் இலக்கம் ........ கொண்ட காணித் துண்டு என குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளதுமான அளவில் ஹெக்ரேயர்/ஏக்கர் ஒன்று, ரூட் ............ பர்ச்சஸ் .............. விசாலமானதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி: மேட்டு நிலம்

வடக்கு : யக்கல்ல - கல்குளம வீதி. பாதுகாப்பு;

கிழக்கு : திலகரத்ன முதின்சேலாகே சோமபாலகே சேற்று நிலம்;

தெற்கு : அரச காணி;

மேற்கு : ஒருகமான்குளம கிராமத்திற்கு செல்லும் வீதிப் பாதுகாப்பு.

ஜே. பீ. கே. எல். பீ. மதுவந்தி,
பிரதேச செயலாளர்,
திரப்பனை.

*2024, ஒகத்து 22.*

*11 - 163/1*

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

*இணைப்பு 09*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 வது பிரிவின் (4) ஆவது உப பிரிவிற்கமைய வழங்கப்பட்டுள்ள அளிப்பு பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 வது பிரிவு) தொடர்பான அறிவித்தல்)

*வட மத்திய மாகாண சபையின், அநுராதபுர மாவட்டத்தின் மிஹிந்தலை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் என். பீ. எஸ். ஏ. நாயக்க பண்டார ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) வது உப பிரிவின் கீழ் அதிமேதகு ஜனாதிபதியினால்*

1986 யூன் 12 ஆம் திகதி வழங்கப்பட்ட அனு/பி/11127 ஆம் இலக்கமுடைய அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான உக்குளன்குளத்தில் வசிக்கும் ஹெட்டிநாராயன முதியன்சேலாகே சிஞ்ஞோ அப்புஹாமி என்பவருக்கு அளிக்கப்பட்ட அநுராதபுர மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 20/07 இன் கீழ் 1992.09.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காணிக்கு பின் உரிமையாளராவதற்கு சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாமையினால் அல்லது என அறிக்கையிடப்பட்டுள்ளதால் இவ்வளிப்பு பத்திரத்தை மேலய சட்டத்தின் 104 வது பிரிவின் கீழ் இரத்துச் செய்ய கடமையாற்றப்படுகிறது என இத்தால் அறிவித்துச்கொள்கிறேன் இது தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2024.12.27 ஆம் திகதக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுர நிர்வாக மாவட்டத்தின் மிஹிந்தலை பிரதேச செயலாளர் பிரிவின் 588 – உக்குளன்குளம் (20 பீ) கிராம உத்தியோகத்தர் பிரிவின் உக்குளன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள வசமுள்ள மற்றும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ. கி. வ. 168 ஆம் இலக்கமுடைய வெளிக்கள பத்திரத்தல்/ஆல் தயாரித்த ஆம் இலக்கமுடைய பிரிப்பு வரைபடத்தின் 298 ஆம் இலக்கமுடைய காணி துண்டாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள, அளவில் ஹெக்டயார் 0.403/ஏக்கர் - றூட் - பேர்ச்ஸ் - விஸ்தீரனமுள்ள கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்ட அரச காணி மேட்டு நிலம்

வடக்கு : துண்டு இலக்கம் 12;
கிழக்கு : துண்டு இலக்கம் 303;
தெற்கு : துண்டு இலக்கம் 299;
மேற்கு : துண்டு இலக்கம் 297.

என். பீ. எ. எஸ். நாயக்க பண்டார,
பிரதேச செயலாளர்,
மிஹிந்தலை.

2024, பெப்புருவரி 28.

11 - 163/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 வது பிரிவின் (4) ஆவது உப பிரிவிற்கமைய வழங்கப்பட்டுள்ள அளிப்பு பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 வது பிரிவு) தொடர்பான அறிவித்தல்)

வட மத்திய மாகாண சபையின், அநுராதபுர மாவட்டத்தின் மிஹிந்தலை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் என். பீ. எஸ். ஏ. நாயக்க பண்டார ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) வது உப பிரிவின் கீழ் அதிமேதகு ஜனாதிபதியினால் 1986 யூன் 12 ஆம் திகதி வழங்கப்பட்ட அனு/பி/3748 ஆம் இலக்கமுடைய அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான சங்கிலிகுளத்தில் வசிக்கும் அப்புரால மெணிக்ராலகே டிங்கிரிபண்டா என்பவருக்கு அளிக்கப்பட்ட அநுராதபுர மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 30/129 இன் கீழ் 1993.05.25 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காணிக்கு பின் உரிமையாளராவதற்கு சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாமையினால் அல்லது என அறிக்கையிடப்பட்டுள்ளதால் இவ்வளிப்பு பத்திரத்தை மேலய சட்டத்தின் 104 வது பிரிவின் கீழ் இரத்துச் செய்ய கடமையாற்றப்படுகிறது என இத்தால் அறிவித்துக்கொள்கிறேன். இது தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2024.12.27 ஆம் திகதக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுர நிருவாக மாவட்டத்தின் மிஹிந்தலை பிரதேச செயலாளர் பிரிவின் 588 – உக்குளன்குளம் கிராம அலுவலர் பிரிவின் சங்கிலிகுளம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள .................. வசமுள்ள மற்றும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இ. கி. வ. 158 ஆம் இலக்கமுடைய வெளிக்கள பத்திரத்தில்/.................. ஆல் தயாரித்த ஆம் இலக்கமுடைய பிரிப்பு வரைபடத்தின் 250 ஆம் இலக்கமுடைய காணி துண்டுடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள, அளவில்/ஏக்கர் 01 றூட் 03 பேர்சஸ் 37 விஸ்தீரனமுள்ள கீழே

தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்ட அரச காணி: மேட்டு நிலம்

வடக்கு : துண்டு இலக்கம் 247;
கிழக்கு : துண்டு இலக்கம் 249;
தெற்கு : துண்டு இலக்கம் 252;
மேற்கு : துண்டு இலக்கம் 251.

என். பீ. எஸ். ஏ. நாயக்க பண்டார,
பிரதேச செயலாளர்,
மிஹிந்தலை.

2024, மாச்சு 18.

11 - 163/3

---

## நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75804.
மத்திய மாகாண காணி ஆணையாளரின் இலக்கம்.: CPC/LC/LD/4/1/30/47.

### 21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

மாத்தளை மாவட்டத்தின் லக்கலை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 402 E கந்தேபிட்டவல கிராம அலுவலர் பிரிவின் கந்தேபிட்டவல கிராமத்தில் இ. கி. பி. 20 இன் மேலதிகம் 109 இன் பத்திர இலக்கம் 183 இன் 6757 ஆம் இலக்க காணித் துண்டின் ஒரு பகுதியை சுட்டிக்காட்டுவதற்காக குடியிருப்பு அலுவலரால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தினூடாக காண்பிக்கப்பட்டுள்ள 02 ரூட் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை விவசாய நோக்கத்திற்காக திரு. கோனார முதியன்சேலே பஹுரே கெதர சேனாதீர என்பவர் நீண்ட காலக் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன:**

வடக்கு : திரு. ஜகத் வசந்த கோனார என்பவரது காணி (நீண்ட காலக் குத்தகைக்கு கோரியுள்ள);
கிழக்கு : வீதியின் பாதுகாக்கப்பட்ட பகுதி ((1329 1/2);
தெற்கு : LL அனுமதிப்பத்திரத்துடனான காணி;
மேற்கு : கால்வாயின் பாதுகாக்கப்பட்ட பகுதி.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2024.08.07 ஆம் திகதி முதல் முன்னோக்கி)

(ஆ) **வருடாந்த குத்தகை தொகை**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை**.- தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது.

(இ) இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/பிரதி காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2024.08.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. அதற்குப் பின்னர்கூட இந்தக் காணியைக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்திற்கு மாத்திரமே உப குத்தகை அல்லது உரிமை மாற்றும் செய்வதற்கு முடியும்;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைகிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜீ. பீ. சௌம்யா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 22.

11 - 188

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/72078.
மாகாண காணி ஆணையாளரின் இலக்கம்.: NWP/PLC/L9/AB/LTL/14.

**21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் அம்பன்பொல பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 190, அம்பன்பொல கிராம அலுவலர் பிரிவின் கோனமடித்த கிராமத்தின் இ. கி. ப. 143 இன் துண்டு இலக்கம் 04 காணியின் ஒரு பகுதிக்காக குடியிருப்பு அலுவலரால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தின் துண்டு இலக்கம் A ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள 40 பரச்சஸ் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வர்த்தக நோக்கத்திற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன:**

வடக்கு : சொந்துருகம வீதி;
கிழக்கு : பிரவேச வழி;
தெற்கு : அரசாங்கக் காணி;
மேற்கு : சொத்மன் என்பவரின் காணி.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2024.08.07 முதல் 2054.08.07 வரை)

**வருடாந்த குத்தகை தொகை**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா உம் (ரூபா. 5,000,000.00) அதற்கு அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை**.- தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது.

(ஆ) இந்தக் காணியை நீர் தாங்கிக் கோபுரம் மற்றும் பராமரிப்பு அலுவலகத்தை நிர்மாணித்தல் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்டுத்திக்கெள்ளக் கூடாது;

(இ) இந்தக் குத்தகை ஆரம்பிக்கும் திகதி முதல் ஒரு வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/பிரதேச

செயலாளர் திருப்தியடையும் வகையில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர், திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2024.08.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகை க்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைகிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

ஆர். டீ. எல். சமிந்து லக்ஷான் ஜயரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 15.

11 - 201

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.